சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2020 – 2021 –ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை – மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – ரூ.5,95,49,477/– மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி அரசு பழங்குடியினர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய விடுதி மற்றும் வேலூர் மாவட்டம், பீஞ்சமந்தை அரசு பழங்குடியின மாணவியருக்கு புதிய விடுதி கட்டுதல் – நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (நிலை) எண்: 12

**நாள் : 21.01.2021**
சார்வரி, தை திங்கள் 8–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.பமே/ஈ1/2721/2020 நாள்.13.04.2020.

-------

**ஆணை :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள்.

**“பழங்குடியின மாணவ, மாணவியர் அவர்களது வாழ்விடங்களை விட்டு கல்வி பயிலும் பள்ளிகளின் அருகே பாதுகாப்புடன் தங்கி கல்வி பயில ஏதுவாக நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 300 மாணவர்கள் தங்கி படிப்பதற்காக ரூ. 5.00 கோடி மதிப்பில் ஒரு விடுதியும் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 50 மாணவியர்கள் தங்கி படிப்பதற்காக ரூ. 1.50 கோடி மதிப்பில் மற்றொரு விடுதியும் ஆக மொத்தம் ரூ. 6.50 கோடி செலவில் இரு விடுதிகள் கட்டப்படும்”**

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர் நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி அரசு பழங்குடியினர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள ஓட்டு கட்டடம் இடிந்து விடும் தருவாயில் உள்ளதால் மாணவர் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்படி கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய விடுதிக் கட்டடம் கட்டக் கேட்டுக் கொண்டதற்கிணங்க முள்ளுக்குறிச்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 300 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் தோராய மதிப்பீடு ரூ.500.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரித்து தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார் .

3. மேலும் அவர் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் மொத்தம் 18 அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள், 12 மாவட்டங்களில் மட்டும் இயங்கி வருகின்றன என்றும், வேலூர் மாவட்ட

(த.பி.பா.)

ஆட்சி தலைவர் அவரது கடிதத்தில், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், பீஞ்சமந்தை கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி என இரண்டு பள்ளிகள் இயங்கி வருகிறது என்றும், இவ்விரண்டு பள்ளிகளிலும் மொத்தம் 149 பழங்குடியினர் இன மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர் என்றும் மேற்படி, இரண்டு பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ/மாணவியர்கள் அனைவரும் 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ள சுற்று வட்டார கிராமங்களிலிருந்து மலைப்பகுதியில் உள்ள பள்ளிக்கு வந்து செல்கின்றனர் என்றும், அவ்வாறு கிராமங்களில் இருந்து வரும் மாணவியர்கள் பள்ளிக்கு வந்து செல்ல மிகவும் கடினமாக உள்ளதாகவும், விடுதி வசதி இருந்தால் மாணவியர்கள் வருகை அதிகமாக இருக்கும் எனவும், தற்போது இயங்கி வரும் உயர்நிலைப் பள்ளி பிற்காலத்தில் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் போது மாணவர்கள் வருகை மேலும் அதிகரிக்கும் என்றும் , பீஞ்சமந்தை கிராமத்தில் மாணவிகள் தங்கி பயிலும் வகையில் புதிய பழங்குடியினர் நல மாணவியர்கள் விடுதி வேண்டும் எனவும், வேலூர் மாவட்டத்தில் புதியதாக கட்டப்பட இருக்கும் இவ்விடுதியில் எதிர்காலத்தில் அதிக பள்ளி மாணவியர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில வாய்ப்புள்ளதால் கீழ்க்கண்ட வசதிகள் உள்ளடக்கிய மாணவிகள் விடுதிக் கட்டடம் கட்டலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

**கீழ்தளம்:** மாணவியர்கள் தங்கும் இடம் (Dormitory Hall), கழிவறை மற்றும் குளியலறை வசதிகளுடன், சமையலறை உணவுப் பொருட்கள் இருப்பு அறை மற்றும் காப்பாளர் / அலுவலக அறை, படிக்கும் வசதிகள் மற்றும் கணினியுடன் கூடிய நூலக அறை.

**மேல்தளம்:** மாணவியர்கள் தங்கும் இடம் 2 (Dormitory Hall) (ஒவ்வொன்றிற்கும் 2 கழிவறைகள் மற்றும் 2 குளியலறைகளுடன் மொத்தம் 4 கழிவறைகள் மற்றும் 4 குளியலறைகள்) மெத்தையுடன் கூடிய கட்டில்கள் (2 அடுக்கு) அனைத்து இடங்களிலும் மின் இணைப்பு, மின் விசிறி, மின் விளக்கு, ஆழ்துளை கிணறு, 12,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி RO System (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்), Solar Power System, Incinerator for Girls மற்றும் சூரிய சக்தி வாட்டர் ஹீட்டர்.

4. மேற்கண்ட நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி அரசு பழங்குடியினர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கான புதிய 300 மாணவர்கள் தங்கும் விடுதி கட்டடம் கட்ட ரூ.500/-இலட்சத்திற்கும் வேலூர் மாவட்டம், பீஞ்சமந்தையில் அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதிக்காக 50 மாணவியர்கள் தங்கும் புதிய கட்டடம் கட்ட ரூ.150 இலட்சத்திற்கும் ஆகமொத்தம் ரூ.650 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி மாணவர் உண்டு உறைவிடப் பள்ளியில் உள்ள பழுதடைந்த ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு 300 மாணவர்கள் தங்கி பயில ரூ.4,59,92,091/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்) மதிப்பில் ஒரு விடுதியும், வேலூர் மாவட்டம் பீஞ்சமந்தை ஜவ்வாது மலையில் 50 மாணவியர்கள் தங்கி பயில ரூ.1,35,57,386/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்று எண்பத்தாறு மட்டும்) மதிப்பில் மற்றொரு விடுதியும் ஆக மொத்தம் ரூ.5,95,49,477/- (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து நானூற்று எழுபத்தேழு மட்டும்) செலவில் இரு புதிய

விடுதிகள் கட்ட நடப்பு நிதியாண்டு 2020–2021–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது. இதற்கான நிதியொப்பளிப்பு அடுத்த நிதியாண்டு 2021–2022–இல் வழங்கப்படும்.

6. கட்டுமானப் பணிகளைக்குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், அதன்படி தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2021–2022–ஆம் நிதியாண்டில் அனுப்பி வைக்குமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலும், இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் உள்ள பழைய கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கு ஏலம் விடும் நடைமுறையினை, இடிக்கப்படவேண்டிய கட்டடங்களில் உள்ள கதவு சன்னல்கள், மரம், மரச்சாமான்கள் மற்றும் இரும்புத் தளவாடங்கள் ஆகிய கழிவுப் பொருட்களின் மதிப்பினைக் கணக்கிட்டு உத்தேச குறைந்தபட்ச ஏலத்தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும் மற்றும் இடிக்கப்படவேண்டிய கட்டடங்களின் விவரம் குறைந்தபட்ச ஏலத்தொகை ஆகிய விவரங்களுடன் கூடிய பொது ஏல அறிவிப்பு பரவலாகச் செய்யப்படவேண்டும் எனும் விதிமுறைகளைத் தவறாது செயல்படுத்துமாறும் இந்நடைமுறையின்படி, ஏலத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படுவதை உறுதி செய்யுமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.1713/நிதி (ஆதி(ம)பந துறை) /2021, நாள் 18.01.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.
நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை–600 009.
நிதி (வ.செ.பொ) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர்
அவர்களின் தனிச்செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு1/ஆதிந7,ஆதிந4 மற்றும் ஆதிந5) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

22.1.2021